**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாமக்கல்.**
**முன்னிலை திருமதி M.பிரவீணா. M.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாமக்கல்**

**2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ம் நாள் திங்கள்கிழமை**

**REA.No.4/2023 in REP.No.53/2022 in HRCOP.No.7/2010**

ஸ்ரீவிநாயக பைனான்ஸ்
அதற்காக அதன் நிர்வாக பங்குதாரர் ....மனுதாரர்/மனுதாரர்

/எதிராக/

1.பாலசுப்ரமணியம்
2. ராஜசேகர்
3. அருணாசலம்
4. கமலம்
5. உண்ணாமலை ...எதிர்மனுதாரர்கள்/எதிர்னுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 16.11.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.V.ரகு அவர்கள் ஆஜராகியும், 1, 4 எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்களுக்கு இம்மனு குறித்த அறிவிப்பானது சார்வு செய்யப்பட்டும், ஆஜராகாத காரணத்தினால் மேற்படியாருக்கு எதிராக 09.01.2024 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், போதிய வாய்ப்பு கொடுத்தும் பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தினால், 1, 4 எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்களுக்கு எதிராக 20.06.2024 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், 5ம் எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முத்துவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பு வாதத்திற்காக போதிய வாய்ப்பு கொடுத்தும், வாதம் செய்ய முன்வராத காரணத்தினால் எதிர்மனுதாரர் தரப்பு வாதமானது இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களையும் மற்றும் வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவில் கண்டுள்ள திருத்தப்பாடு விவரங்களின்படி நிறைவேற்று மனுவில் 5ம் எதிர்மனுதாரர் இறந்தார் என்பதை நீக்கம் செய்து உத்தரவிடுமாறு உத்தரவிடுமாறு உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17ன்படி மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>2.மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக பங்குதாரர் என்றும், நிறைவேற்று மனு தாக்கல் செய்யும் போது 5ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என கூறியதன் பேரில் 5ம் எதிர்மனுதாரரை இறந்தார் என குறிப்பிட்டு தவறுலாக மனு தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாகவும், ஆகவே, இம்மனுவில் கண்டுள்ள திருத்தப்பாடு விவரங்களின்படி நிறைவேற்று மனுவை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**<u>3. 5ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் வேண்டுமென்றே உயிரோடு இருப்பவரை இறந்தார் என்று தெரிவித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், 5ம் எதிர்மனுதாரரின் கணவர் பெயரை குறிப்பிடுவதற்கு பதிலாக வேண்டுமென்றே 5ம் எதிர்மனுதாரரின் மகனான இறந்துபோன ராமநாதனை கணவராக குறிப்பிட்டு நீதிமன்றத்திற்கு தவறான தகவலை தெரியப்படுத்தி அதன் பிறகு 5ம் எதிர்மனுதாரரின் கணவர் பெயர் கருப்பையா என்று குறிப்பிட்டு மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் உண்மை விவரங்களுக்கு முற்றிலும் மாறாக பொய்யான சங்கதிகளை நீதிமன்றத்திற்கு தெரிவித்துவிட்டு தற்போது 5ம் எதிர்மனுதாரர் பெயருக்கு பின்னால் இறந்தார் என்று இருப்பதை நீக்கம் செய்ய வேண்டி திருத்தல் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் மனுதாரர் கோருகிறபடி இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5.மனுதாரர் தரப்பு வாதம் யாதெனில், நிறைவேற்று மனு தாக்கல் செய்யும் போது, 5ம்

எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்று கூறியதன் பேரில் 5ம் எதிர்மனுதாரரை இறந்தார் என தவறாக குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், பின்னிட்டு தான் 5ம் எதிர்மனுதாரர் உயிரோடு இருப்பதாக தெரியவந்ததாகவும், ஆகவே, இம்மனுவில் கண்டுள்ள திருத்தப்பாடு விவரங்கள்படி வழக்கரையை திருத்தம் செய்ய அனுமதிக்குமாறு வாதிடப்பட்டது.

6.எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில், மனுதாரர் வேண்டுமென்றே உயிரோடு இருப்பவரை இறந்தார் என்று தெரிவித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், 5ம் எதிர்மனுதாரரின் கணவர் பெயரை குறிப்பிடுவதற்கு பதிலாக வேண்டுமென்றே 5ம் எதிர்மனுதாரரின் மகனான இறந்துபோன ராமநாதன் என்பவரை கணவராக குறிப்பிட்டு இந்நீதிமன்றத்திற்கு தவறான தகவலை தெரியப்படுத்தி அதன் பிறகு 5ம் எதிர்மனுதாரரின் கணவர் பெயர் கருப்பையா என்று குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7.நிறைவேற்று மனுவினை பரிசீலனை செய்யும் போது, இம்மனு மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கும் பொருட்டு இம்மனு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மேலும், மனுதாரர் இம்மனுவில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யும் போது 5ம் எதிர்மனுதாரரை இறந்துவிட்டார் என்று தவறாக கூறிவிட்டதாகவும், தற்போது அவர் உயிரோடு உள்ளார் என்று தெரியவந்ததால் மனுவில் கண்டுள்ள விவரங்கள்படி நிறைவேற்று மனுவினை திருத்தம் செய்யுமாறு பரிகாரம் கோரியுள்ளார்.

8. மேலும், இம்மனுவினை பரிசீலனை செய்யும் போது, 5ம் எதிர்மனுதாரரின் கணவர் பெயர் கருப்பையா என்று மேற்குறிப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு பதிலுரை தாக்கல் செய்திருப்பினும், இம்மனுவை நிராகரிக்கும் பொருட்டு எடுத்துரைக்கும் பொருண்மைகளானது ஏற்கத்தகும் வகையில் இல்லை. நிறைவேற்று மனுவில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்வு காணும் பொருட்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, திருத்தப்பாடு விவரங்களில் கண்டுள்ள விவரங்கள்படி நிறைவேற்ற மனுவை திருத்தம் செய்ய அனுமதி வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக,

இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை

இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் மீண்டும் பிழை திருத்தங்கள் செய்யப்பட்டு இன்று 2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2024.11.25 17:01:55 +0530

கூடுதல் மாவட்டஉரிமையியில் நீதிபதி,
நாமக்கல்.

உபயமனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2024.11.25 17:02:01 +0530

கூடுதல் மாவட்டஉரிமையியில் நீதிபதி,
நாமக்கல்